**மினுவாங்கொடை நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினுவாங்கொடை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று 2013 மே 22 ஆந் திகதி ரூபா 155,555 பெறுமதியில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த வண்டியின் கிரயமான 215,500 தெகை மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 03 முச்சக்கர வண்டிகளில் ஒரு முச்சக்கர வண்டியின் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 2,000,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் டேலர் என்பன கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர சபையின் நூலகத்திற்குக் கிடைத்த ரூபா 77,695 பெறுமதியான நன்கொடைப் புத்தகங்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) வைப்புச் செய்யப்பட்ட ரூபா 17,145 பெறுமதியான காசோலை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மதிப்பிழந்திருந்த போதிலும் கணக்குகளில் அதற்குரிய பதிவுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரக் கட்டணம் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ஏனைய வருமானம் ரூபா 564,130 உள்ளடக்கப்பட்டமையால் அனுமதிப்பத்திரக் கட்டண சிட்டையிடப்பட்ட வருமானம் அதிகரித்தும், ஏனைய வருமானம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

02 கடன்கொடுத்தோர் கணக்குகளுக்குரிய கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 676,127 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,316,728 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,044,315 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 10,525 | 10,652 | 10,833 | 5,949 | 9,855 | 10,145 | 11,607 | 8,262 |
| வாடகை | 21,640 | 19,426 | 19,599 | 946 | 20,345 | 20,784 | 21,076 | 1,175 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 532 | 1,137 | 576 | 05 | 1,152 | 1,118 | 1,154 | 11 |
| ஏனைய வருமானம் | 17,261 | 31,361 | 28,444 | - | 12,530 | 21,852 | 19,652 | - |

**2.2.2 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதன வரி**

(i) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு வீதவரியும் வரியும் மீதியில் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தொகை ரூபா 5,715,899 ஆக இருந்ததுடன், அதன் அறவிடும் சதவீதம் 69 ஆனமையால் அறவிடல்களின் செயல்முன்னேற்றம் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

(ii) ரூபா 5,000 தொகைக்கு மேற்பட்ட ஆதனவரி நிலுவை காண்பிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் நபர்களின் எண்ணிக்கை 246 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிலுவைத் தொகை ரூபா 3,441,312 ஆக இருந்தது. இந்நிலுவையை அறவிடுவதற்காக நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 22 ஆதனவரி அலகுகள் மூடப்பட்டதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 170,806 தொகையான ஆதனவரி பெறுமதி பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அலகுகள் மூடப்பட்டிருந்தது என அதற்குரிய கிராம உத்தியோகத்தர்களின் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

---

**வியாபார அனுமதிப்பத்திரம்**

---

09 தொழில் முயற்சிகள் மூடப்பட்டமையால் 2017 ஆம் ஆண்டிற்கான நிறுவனம் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாதிருந்த போதிலும், அது தொடர்பாக கிராம உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

---

(அ) 02 வளிப்பதனாக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக வரையறுக்கப்பட்ட அரச வணிகக் கூட்டுத்தாபனத்திற்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட ரூபா 164,000 பெறுமதியான காசோலை 2018 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்படாமல் 2018 பெப்ரவரி காண்பிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படாத காசோலையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திவிநெகும வாராந்த சந்தை திறக்கும் போது இலவசமாக வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டு 200 வாராந்த சந்தை ஏப்ரன் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும், அவை பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பெறுகைகள்

---

### 3.2.1 ஒப்பந்த நிர்வாகம்

---

(அ) ஹதிறம சந்தியில் மலசலகூட முறைமையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,297,571 தொகையில் 02 மாதங்களில் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு 2016 செப்தெம்பர் 14 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இதன் மேலதிக வேலைக்காக மீண்டும் ரூபா 494,756 தொகையில் 02 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 5,792,327 ஆக இருந்ததுடன், சபை வேலைகளும் பூர்த்தி செய்ததாக ரூபா 4,993,299 தொகை 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. அத்திகதியில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 4,467,849 ஆக இருந்த போதிலும், ரூபா 4,993,299 தொகை செலுத்தப்பட்டமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 525,450 ஆகும். அதாவது 2017 திசெம்பர் 13 ஆந் திகதி வரையிலும், இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அத்திகதியில் முதலாவது உடன்படிக்கையின் தாமதக் கட்டணம் ரூபா 476,781 ஆக

இருந்த போதிலும், ரூபா 211,903 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மேலும் இரண்டாம் உடன்படிக்கையின் தாமதக்கட்டணமான ரூபா 9,895 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்ட மண்டப நிர்மாணத்திற்காக ரூபா 3,175,332 தொகையில் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2016 யூன் 23 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கும் போது மேலதிக வேலைக்காக ரூபா 1,187,949 தொகையில் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருடன் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்காக பொறியியலாளரின் பரிந்துரை காணப்படவில்லை. இந்த மொத்த ஒப்பந்தமும் 2017 யூலை 27 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டமையினால் ரூபா 104,163 தொகையான தாமதக் கட்டணம் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வேகொவ்வ மயான நிலத்தின் எல்லையை நிர்ணயிப்பதற்காக வேலியமைக்கும் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 459,050 ஆக இருந்ததுடன் ஆகக் குறைந்த கூறுவிலையின் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 447,000 ஆகும். செயற்திட்டத்தின் உள்ளபடியான செலவினம் ரூபா 499,975 ஆகக் காணப்பட்டமையால் மேலதிக வேலைக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சி ரூபா 52,975 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முரண்கள் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.3 ஆம் பிரிவிற்கு முரணாக இருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படாமை |
| (ஆ) | செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் | மதிப்பீடு செய்தலில் நலிவுகள் |